**2019–ம் ஆண்டு ஜனவரி மாதம் நகராட்சி அலுவலகத்தில் நடைப்பெற்ற**

**திண்டிவனம் நகர்மன்றத்தின் சாதரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை :-**

**திரு. பு.ஸ்ரீபிரகாஷ்,**
**தனி அதிகாரி,**
**திண்டிவனம் நகராட்சி**

# மன்ற பொருள்

1. திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில், தூய்மை இந்தியா திட்டம், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், 4 இடங்களில் நுண்உரக்களம் அமைக்கும் பணிகள் நடைபெற்று, பணிகள் தற்போது முடிவுறும் தருவாயில் உள்ளது. மேற்காணும் நுண்உரக்களங்களை தற்போது பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பெறவுள்ளது. தற்போது, $8^{th}$ State High Powered Committee ஆய்வு கூட்ட நடவடிக்கைகள் நாள். 19.12.2018ல், மூன்று அல்லது நான்கு நுண்உரக்களங்களுக்கு ஒரு மறுசுழற்சிக்கு உட்பட்ட பொருட்களை சேகரிக்கும் கூடம் (Resource Recovery Center) ரூ. 18.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இந்நகராட்சிக்குச் சொந்தமான சலவாதி சாலையில் அமைந்துள்ள உரங்கிடங்கிற்கு அருகில் மறுசுழற்சிக்கு உட்பட்ட பொருட்களை சேகரிக்கும் கூடம் (Resource Recovery Center) ரூ. 18.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, தொழில்நுட்ப அனுமதி பெற நகராட்சி மண்டல செயற்பொறியாளர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு மதிப்பீடுகள் தயார் செய்து நகராட்சி மண்டல செயற்பொறியாளர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பிட அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 5303/2018/இ1)**

2. இந்நகராட்சிக்கு சொந்தமான வாய்கால் வரத்துகளை தூர்வாருதல், சாலைகளில் உள்ள மணல் மேடுகளை சமன் செய்தல், கழிவு நீர் கால்வாய் சுத்தம் செய்தல், செடி கொடிகளை அகற்றுதல், மற்றும் மழைகாலங்களில் ஏற்படும் அடைப்புகளை சரிசெய்தல் போன்ற அனைத்து அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ள ஏதுவாக திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு $8^{th}$ State High Powered Committee ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படி Excavator Backhoe Loader 3DX (JCB) வாகனம் வாங்க ரூ. **28.50**

இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு மதிப்பீடுகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பிடவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 5302/2018/இ1)**

3. திண்டிவனம் நகராட்சி மொத்தம் 33 வார்டுகளில் உள்ள தினசரி சேகரிக்கப்படும் குப்பைகளை தரம்பிரித்து உரங்கள் தயார் செய்யும் திட்டத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவில் (ந.க.எண்11088–13/2017/P3 நாள்:24.05.2017) இந்நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள இந்நகர பகுதிகளில் சேகரமாகவும் குப்பைகளை தரம் பிரித்து உரம் தயார் செய்வதற்கு விரிவான திட்ட அறிக்கை (DPR) அனுப்பப்பட்டதற்கு கீழ்வரும் பணிகளுக்கு ரூ302.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. இந்நிலையில் இந்நகரில் தினசரி சேகரமாகும் குப்பைகளை நிரப்புவதற்கு போதிய இடவசதி இல்லாததாலும் ஒரே இடத்தில் குப்பைகளை கொட்டுவதால் அப்பகுதி பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றதாலும், நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் நகரப் பகுதிகளில் நகராட்சிக்கு சொந்தமான பொது பயன்பாட்டிற்கான இடங்களை தெரிவு செய்து Micro Composting processing முறையில் அந்தந்த பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை உரமாக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் நகர மன்ற தீர்மான எண் : 98 நாள் : 28.03.2018 அனுமதிக்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்து திருத்திய நிர்வாக அனுமதி பெற பிரேரணையை அனுப்பப்பட்டது.

| RAS -1 Accorded already as per the CMA proceeding No.11088/13/2016, Dated : 24.05.2017 | | | | RAS – 2 Now Accorded The CMA proceeding No.30354/P3/2016, Dated : 01.06.2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Sl. No | Description | Estimate Amount | Package Amount | Sl. No | Description | Estimate Amount | Package Amount |

| 5 | | (Rs in laksh) | (Rs. in Laksh) | | | (Rs in laksh) | (Rs. in Laksh) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Purchase of Containerized push | 10.80 | 10.80 | 1 | Purchase of Containerized push | 10.80 | - |
| 2 | Purchase of primary and transpiration vehicles light commercial vehicle | 22.50 | 22.50 | 2 | Purchase of primary and transpiration vehicles light commercial vehicle | 22.50 | - |
| 3 | 1.Construction of window compost pad with available compost pad of 4000 sqm | 100.00 | 207.00 | 3 | 1).Construction of Micro Compost center at Roshnai with processing capacity of 4TPD | 65.00 | Opted for Decentralised Micro Compost Center instead of centralized system to minimize the secondary transportation |
| | 2.Construction of 1/3rd roof for over | 49.00 | | | | | |
| | 3.Construction of pre processing shed | 54.00 | | | 2)Construction of Micro Compost center at Salavathy | 85.92 | |
| | 4.Providing leach | 4.00 | | | | | |
| 4 | 1.Construction of Administration building | 5.00 | 53.92 | | 3).Construction of Micro Compost center at Municipal division office with processing capacity of 4TPO | 55.00 | |
| | 2.Construction of labour rest room | 8.00 | | | | | |
| | 3.Providing vehicle sheet | 6.00 | | | | | |
| | 4.Providing water supply arrangement with all around piping | 7.50 | | | 4).Construction of Micro Compost center at Avarapakkam with processing capacity of 4TPO | 55.00 | |
| | 6.Construction of compound wall | 21.00 | | | | | |
| | 7.Providing Green | 2.42 | | | | | |
| 5 | Information Education and Communication components. | 7.78 | 7.78 | 5 | Information Education and Communication components. | 7.78 | - |

| | Total Rs. | 302.00 | 302.00 | | Total Rs. | 302.00 | - |
|---|---|---|---|---|---|---|---|

அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 30354/P3/2016/ நாள்:01.06.2018ல் மேற்கண்டவாறு திருத்திய நிர்வாக அனுமதி வரப்பெற்றது. **திருத்திய நிர்வாக அனுமதி வரிசை எண்.1 மற்றும் 2 பதிலாக பின்வருமாறு** குப்பைகள் முதன்மை சேகரிப்பு பணிக்கு பேட்டரி வாகனங்கள் வாங்க மீளவும் திருத்திய நிர்வாக அனுமதி பெற விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்து நகர மன்ற தீர்மான எண் : 216நாள் : 13.08.2018 அனுமதிக்கப்பட்டு பிரேரணையை அனுப்பப்பட்டது.

| Sl. No. | Name of the Centre | Primary collection Vehicle |
|---|---|---|
| 1 | Battery Vehicle 40 Nos | 72.00 |

அதில் பின்வருமாறு திடக்கழிவு மேலாண்மை பணியினை சிறப்பாக மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட தள்ளுவண்டிகள், டிப்பர் ஆட்டோக்கள் வாங்குதல் பணிக்கு பதிலாக இலகுரக வாகனங்கள் (LCV) மற்றும் பேட்டரி வாகனங்கள் (BOV) வாங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் இந்நகராட்சி மொத்த குடியிருப்புகளின் அடிப்படையில் 25 எண்ணிக்கைகள் பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்கள் மற்றும் இலகுரக வாகனங்கள் (LCV) 4 எண்ணிக்கைகள் வாங்க ரூ.67.40 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகர மன்ற தீர்மான எண் : 244 நாள் : 07.09.2018 அனுமதிக்கப்பட்டு பிரேரணையை அனுப்பப்பட்டது. தற்போது மொத்த குடியிருப்புகள் மற்றும் வணிக கட்டிடங்களின் அடிப்படையில் பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்கள் மற்றும் இலகுரக வாகனங்கள் (LCV) வாங்க பிரேரணையை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டது. அதன்படி 8th State High Powered Committee ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படி பின்வருமாறு பிரேரணையை தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | எண்ணிக்கை | மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | திண்டிவனம் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மைப் பணிக்காக பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் வாங்குதல் | 33 | 59.40 |
| 2 | திண்டிவனம் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மைப் பணிக்காக இலகுரக வாகனம் வாகனம் வாங்குதல். | 4 | 22.40 |
| | | **மொத்தம் ரூ** | **81.80** |

மேற்கண்டவாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறையில் வரிசை எண்.1 மற்றும் 2–ல் 54 எண்ணிக்கை தள்ளுவண்டிகள் மற்றும் 3 எண்ணிக்கை டிப்பர் ஆட்டோக்கள் வாங்குவதற்காக ரூ.33.30/– இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதல் தொகை ரூ. 48.50 இலட்சத்திற்கும் ஆக மொத்தம் ரூ 81.80/– இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து திருத்திய நிர்வாக அனுமதி பெற பிரேரணையை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

திருத்திய நிர்வாக அனுமதி வரிசை எண் 1 & 2க்குரிய பணியை ரத்து செய்து குப்பைகள் முதன்மை சேகரிப்பு பணிக்கு பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்கள் மற்றும் இலகுரக வாகனங்கள் (LCV) வாங்க விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்து திருத்திய நிர்வாக அனுமதி பெற பிரேரணையை அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2676/2016 /இ1)

4.திண்டிவனம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 8வது மாநில அளவிலானஉயர்மட்ட குழு(8th SHPC)கூட்டம் தூய்மை இந்தியா திட்டம் 2018–2019 நிதியின்கீழ் வரும் பணிக்கு

| வ.எண். | பணியின் பெயர் | **மதிப்பீடு (இலட்சத்தில்)** |
|---|---|---|
| **1.** | **2.** | **3.** |
| **1.** | திண்டிவனம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு Excavator Backhoe loader 3dx Vehicle -1 எண்ணிக்கை வாகனம் வாங்கும் பணி. | **28.50** |
| **2.** | திண்டிவனம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு Battery Operated Vehicle-33 எண்ணிக்கைகள் வாங்கும் பணி. | **81.80** |
| **3.** | திண்டிவனம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு மறுசுழற்சி மையம் அமைக்கும் பணி. | **18.00** |

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.38984/2014/P1 நாள்.11.01.2019இல் 8–வது மாநில அளவிலான உயர்மட்ட குழுகூட்ட நடவடிக்கை நகல் வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மன்றம் பதிவு செய்யலாம். ( ந.க.எண்.2676/2016/இ1)

5. இந்நகராட்சி பகுதிகளில் பூங்காக்கள் மற்றும் பார்க்குகளில் தோட்ட கலைக்குப்பயன்படுத்தும் கத்தரிக்கோல் மூலம் செடிகளை வெட்டும் 2 கத்தரிக்கோள் சப்ளை செய்ய 11.12.2018 அன்று விலைபுள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்கள் விலைப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒரு கத்தரிக்கோல் விலை |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பகுதிகளில் பூங்காக்கள் மற்றும் பார்க்குகளில் தோட்ட கலைக்குப்பயன்படுத்தும் கத்தரிக்கோல் மூலம் செடிகளை வெட்டும் 2 கத்தரிக்கோள் சப்ளை செய்ய. | ரூ.80000/– | Venus Corporation, Trichy. | ரூ.4200/– |
| | | | Sri Balaji Agro Agencies, Perambalur. | ரூ.4800/– |
| | | | RMK Enterprises, Perambalur. | ரூ.3500/– |

<u>அலுவலக குறிப்பு :–</u>

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண். 3–ல் உள்ள RMK Enterprises, Perambalur நிறுவனத்தின் விளைப்புள்ளி குறைவாக உள்ளதால் அவற்றினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 5278/2018/ எச்1)

6. இந்நகராட்சி பகுதிகளில் செடி மற்றும் முற்புதர்களை வெட்டும் பணியை செய்ய எந்திரங்கள் சப்ளை செய்ய 11.12.2018 அன்று விலைபுள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்கள் விலைப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒரு எந்திரத்தின் விலை |
|---|---|---|---|---|
| 1 | செடி மற்றும் முற்புதர்களை வெட்டும் பணியை செய்ய 2 எந்திரங்கள் சப்ளை செய்தல். | ரூ.80000/– | Venus Corporation, Trichy. | ரூ.39000/– |
| | | | Sri Balaji Agro Agencies, Perambalur. | ரூ.45500/– |
| | | | RMK Enterprises, Perambalur. | ரூ.32500/– |

<u>அலுவலக குறிப்பு :–</u>

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண். 3—ல் உள்ள RMK Enterprises, Perambalur நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அவற்றினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.5279/2018/எச்1)

7. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொது கழிப்பிடம் சுத்தம் செய்யும் நீர் பாய்ச்சும் எந்திரம் ஒன்று சப்ளை செய்ய 11.12.2018 அன்று விலைபுள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்கள் விலைப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒரு எந்திரத்தின் விலை |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொது கழிப்பிடம் சுத்தம் செய்யும் நீர் பாய்ச்சும் எந்திரம் ஒன்று சப்ளை செய்ய. | ரூ.80000/— | Venus Corporation, Trichy. | ரூ.85500/— |
| | | | Sri Balaji Agro Agencies, Perambalur. | ரூ.95000/— |
| | | | RMK Enterprises, Perambalur. | ரூ.72500/— |

<u>அலுவலக குறிப்பு :—</u>

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண். 3—ல் உள்ள RMK Enterprises, Perambalur நிறுவனத்தின் விளைப்புள்ளி குறைவாக உள்ளதால் அவற்றினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 5280/2018/ எச்1)

8.அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். 04.05.2017 மற்றும் அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். 13.10.2017–ன் படி திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட ரோஷணை கிராமம் வார்டு ஏ, பிளாக் – 5, நகரளவு எண்கள். 14/4, 14/5, 16/1 (சர்வே எண். 39/1A2, 39/1A3, 39/2A, 41/1) மற்றும் ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியம், மேல்பாக்கம் கிராமம், சர்வே எண். 228/6எ ஆகியவற்றில் 8.24 ஏக்கர் (அ) 358934.80 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள **L & T நகர்** என்ற அனுமதியற்ற மனைப்பிரிவின் உரிமையாளர் விற்பணை செய்யப்படாத மனைகளை வரன்முறைப்படுத்த ஆன்லைனில் விண்ணப்பித்ததை தொடர்ந்து விழுப்புரம் மண்டலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடித நடவடிக்கைகள் ந.க.எண். 781/2018/விம, நாள். 10.09.2018–ல் திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட ரோஷணை கிராமம் வார்டு ஏ, பிளாக் – 5, நகரளவு எண்கள். 14/4, 14/5, 16/1 (சர்வே எண். 39/1A2, 39/1A3, 39/2A, 41/1) மற்றும் ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியம், மேல்பாக்கம் கிராமம், சர்வே எண். 228/6எ ஆகியவற்றில் 8.24 ஏக்கர் (அ) 358934.80 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள **L & T நகர்** என்ற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொ.ஒ.ம.வ / ந.ஊ.உ.இ (வி.ம) எண். (R) 971/2018 என எண்ணிடப்பட்டு (தன்னிச்சையாக) மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**<u>மனைப்பிரிவு ஒதுக்கீடு விபரம்</u>**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு மொத்த பரப்பளவு | – | 8.24 ஏக்கர் (அ) 358934.80 ச.அடி |
| மொத்த மனைகள் | – | 101 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | – | 1 |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | – | ரோஷணை 71 + (6 பகுதி மனைகள்) |
| | – | மேல்பாக்கம் 23 + (6 பகுதி மனைகள்) |

**<u>பொது ஒதுக்கீடு</u>**

பூங்கா I - 7100.00 ச. அடி

பூங்கா II - 18033.80 ச. அடி

மொத்தம் – 25134.12ச.அடி (விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவில் 10.26 %)

மேற்படி கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமையுடையதாகிறது.

மேற்படி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நகராட்சி எல்லைக்குட்பட்ட விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணங்கள் அதாவது மனை எண்கள். 21 பகுதி, 22பகுதி, 23பகுதி, 24பகுதி, 25பகுதி, 26பகுதி, 27 முதல் 83, 85 முதல் 93, 93A, 94 முதல் 97 ஆகிய மனைகளின் பரப்பளவு 16983 ச.மீட்டர் பரப்பளவிற்கு 1 சதுர மீட்டருக்கு ரூ.

60.00 வீதம் ஆக 16983 ச. மீட்டருக்கு ரூ. 10,18,980/— மனைபிரிவு உரிமையாளரால் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் வளர்ச்சி கட்டணம் 1 ச.மீட்டருக்கு ரூ. 250.00 வீதம் ஆக 16983 ச. மீட்டருக்கு ரூ. 42,45,750/— நகராட்சி கருவூலத்தில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்த பரிந்துரைத்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்படி மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமை கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தினை நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4125/2018/எப்1)

9. இந்நகராட்சிபகுதிகளில் கிராமிய கலைக்குழுவினரைக் கொண்டு சாலையோரங்கள், பள்ளிகள் முதலியவற்றில் தனிநபர் கழிப்பிடம் கட்டுதல், திறந்தவெளியில் மலம் கழித்தலை தவிர்த்தல், குப்பைகளை பிரித்து வழங்குதல், பிளாஸ்டிக் ஒழிப்பு, டெங்கு ஒழிப்பு முதலிய பொது சுகாதாரம் சந்பந்தப்பட்ட செயல்பாடுகள் குறித்து விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்த 07.01.2019 அன்று விலைபுள்ளி கோரியதில் கீழ்கண்ட 3 கலைக்குழுக்கள் விலைப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | கலைக்குழுவினர் பெயர் | நாள் ஒன்றுக்கு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிபகுதிகளில் கிராமிய கலைக்குழுவினரைக் கொண்டு சாலையோரங்கள், பள்ளிகள் முதலியவற்றில் துனிநபர் கழிப்பிடம் கட்டுதல், திறந்தவெளியில் மலம் கழித்தலை தவிர்த்தல், குப்பைகளை பிரித்து வழங்குதல், பிளாஸ்டிக் ஒழிப்பு, டெங்கு ஒழிப்பு முதலிய பொது சுகாதாரம் சந்பந்தப்பட்ட | ரூ.150000/— | சிவசக்தி கிராமிய கலைக்குழு வாழப்பாடி தாலுகா. | ரூ.10000/— |
| | | | விஜி கலைக்குழு தஞ்சாவூர். | ரூ.12000/— |
| | | | ஜெயம் கலைக்குழு வாழப்பாடி. | ரூ.11000/— |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயல்பாடுகள் குறித்து விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்த. | | | |

**<u>அலுவலக குறிப்பு :—</u>** மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1—ல் உள்ள சிவசக்தி கிராமிய கலைக்குழு வாழப்பாடி தாலுகா, கலைக்குழுவினர் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அவற்றினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 5489/2018/ எச்1)

10. இந்நகராட்சி காட்ராம்பாக்கம் மற்றும் ரெட்டனை தலைமை நீரேற்று நிலையம் இறையானூர், நீர்உந்து நிலையம் தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்தபணி பின்வருமாறு நகரமன்ற அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது.

| வரிசை எண் | நகர மன்ற அனுமதி விவரம் | காலநீட்டிப்பு செய்யப்பட்ட காலம் |
|---|---|---|
| 1 | நகரமன்ற தீர்மான எண்.95 நாள்.31.07.2014. | 01.08.2014 முதல் 31.07.2015 |
| 2 | நகரமன்ற தீர்மான எண்.387 நாள்.31.08.2015. | 01.08.2015 முதல் 31.07.2016 |
| 3 | நகரமன்ற தீர்மான எண்.989 நாள்.31.08.2016. | 01.08.2016 முதல் 31.07.2017 |
| 4 | நகரமன்ற தீர்மான எண்.1101 நாள்.28.02.2017. | 01.02.2017 முதல் 31.08.2018 |
| 5 | நகரமன்ற தீர்மான எண்.50 நாள்.16.02.2018. | 01.02.2018 முதல் 31.01.2019 |

மேற்படி ஒப்பந்ததாரர் ஒப்பந்த பணிகாலம் 31.01.2019 முடிவடைவதால் மேற்படி பணியின் ஒப்பந்ததாரர் தனது 04.01.2019ம் தேதிய கடிதத்தில் 09.07.2014ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின் அடிப்படையில் காலநீட்டிப்பு செய்து வழங்குமாறு கடிதம் வழங்கியுள்ளார். மேற்படி பராமரிப்பு பணியை நல்ல முறையில் செய்து வருகிறார்.

எனவே, 09.07.2014ம் தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின் அடிப்படையில் 01.02.2019 முதல் 31.01.2020வரை ஒரு வருடத்திற்கு ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்து அதே ஒப்பந்ததாரர் மூலம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு ரூபாய்.24,00,000,—க்கு குடிநீர் அவசியம் கருதி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :—</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 2187/2013/இ2